பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 24 வியாழக்கிழமை 08.07.2021 கதிர் 111

## இரு கிராமங்கள் முடக்கம்; 7 பிரதேசங்கள் விடுவிப்பு


கொரோனாத் தொற்றுப் பரவலால் மாத்தளை மாவட்டத்தில் மேலும் இரண்டு கிராமங்கள் இன்று காலை 06 மணி முதல் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதனடிப்படையில், மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகஹ கொட்டுவ கிராம உத்தியோகத்தர்

2

## 6 வருடங்களுக்குப் பின்னர் அதியுயர் சபையில் பஸில்

### சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, இன்று சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்தன முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்தார்.

2015ஆம் ஆண்டுக்கு பின்னர் பஸில் ராஜபக்ஷ மீண்டும், நாடாளுமன்றத்தில் சபாபீடத்துக்குள் வருவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

2

## பஸிலுக்கு ஆசி வேண்டி யாழில் விசேட வழிபாடு



நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பதவியேற்றுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன

2

# நிதி அமைச்சரானார் பஸில்; மஹிந்தவுக்கு புதிய அமைச்சு

## கோட்டாபய முன்னிலையில் பதவியேற்பு



**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.**

**இன்று காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.**

2

### அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் உட்பட 31 பேர் கைது







2

## பொலிஸ் அராஜகத்துக்கு எதிராக நீதிமன்றை நாடுகின்றது ஐ.தே.க.



நாட்டில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்கு எதிராக சட்ட

2

## வவுனியா விபத்தில் இளைஞர் உயிரிழப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா - புளியங்குளம் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

2

## முகமாலையில் வாள்வெட்டு; ஒருவர் காயம்

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் நேற்றிரவு 11 மணியளவில் வீட்டுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருந்த குடும்பஸ்தரை வெட்டியுள்ளது.

இதனால் கை, கால் மற்றும் முதுகுப் பகுதிகளில் வெட்டுக் காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர், பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்த வாய்

2

## அல்லைப்பிட்டியில் கஞ்சாவுடன் ஓட்டோ சாரதி ஒருவர் சிக்கினார்



(இ.கலையமுதன்)

யாழ்., ஊர்காவற்றுறை - அல்லைப்பிட்டியில் ஓட்டோவில் 6 கிலோ 500 கிராம் கேரள கஞ்சாவைக் கடத்திச் சென்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இன்று பிற்பகல் ஒரு மணியளவில்

2

## அல்லைப்பிட்டியில் கஞ்சாவுடன்.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)
இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 3 பொதிகளில் 6 கிலோ 500 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 56 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

அவரிடம் கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் ஓட்டோவும் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன.

## முகமாலையில்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)
பேசமுடியாத நபர் ஒருவரும் அடிகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் வீட்டில் இருந்த தொலைக்காட்சி, அலுமாரி உள்ளிட்ட பொருள்களும் அடித்து நொருக்கப்பட்டுள் என.

அத்துடன் வீட்டின் பிரதான வாயிலில் காணப்பட்ட கதவும் வாளினால் வெட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விரைந்து செயற்பட்ட முகமாலை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் சம்பவ இடத்துக் குச் சென்று நிலைமைகளை அவதானித் ததுடன், விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## வவுனியா.........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
கிளிநொச்சியில் இருந்து புத்தளம் நோக்கிப் பொருள்களை ஏற்றிச் சென்ற பாரவூர்தி புளியங்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது கட்டுப் பாட்டை இழந்து குடைசாய்ந்து விபத்துக் குள்ளாகியது.

விபத்தில் காயமடைந்த இருவர் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டனர்.

எனினும் சிகிச்சைப் பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார். வாகனத்தின் சாரதி படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

சம்பவத்தில் மஸ்கெலியா பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய பிரவீன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர்

## 6 வருடங்களுக்கு...

(முதலாம் பக்க தொடர்ச்சி)
பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வருவதற்காக, 'மொட்டு' கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் ஜயந்த கெட்டகொட எம்.பி. பதவி துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பஸிலுக்கு ஆசி.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)
முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கு ஆசி வேண்டி யாழ்ப்பாணத்தில் இன்று விசேட பூஜை வழிபாடு நடத்தப்பட்டது.

கலாநிதி யோகராஜன் அறக்கட்டளை அமைப்பின் யாழ். மாவட்ட இணைப் பாளர் ந.யோகராஜனின் ஏற்பாட்டில் இந்த வழிபாட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதகுருக்களின் பங்குபற்று தலுடன் பூஜை வழிபாடு நடத்தப்பட்ட துடன், சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா நிலைமை காரணமாக சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப் பட்டவர்களோடு பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

## இரு கிராமங்கள்........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
பிரிவின் அகலவத்தை கிராமம் மற்றும் ஹரஸ்கம கிராமம் ஆகியன தனி மைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, இரண்டு மாவட்டங் களின் 7 கிராம உத்தியோகத்தர் பிரிவு கள் இன்று காலை 06 மணி முதல் தனி மைப்படுத்தலிலிருந்துவிடுவிக்கப்பட்டுள் ளன என்றும் இராணுவத் தளபதி குறிப் பிட்டார்.

அதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவின் கீழுள்ள 05 கிராம சேவகர் பிரிவுகள் விடுவிக்கப் பட்டுள்ளன.

மாத்தளை மாவட்டத்தின் மஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தனிமைப் படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது.

## நிதி அமைச்சரானார்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)
பஸில் ராஜபக்ஷ இன்று நாடாளு மன்ற உறுப்பினராகச் சத்தியப்பிர மாணம் செய்துகொள்வதற்கு முன்னர் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

இதேவேளை, நிதி அமைச்சராகப் பதவி வகித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பதவிப் பிரமாண நிகழ்வுகளில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷவின் துணைவியார் திருமதி புஷ்பா ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி செயலாளர் ஆகியோர் கலந்துகொண்ட னர்.

## இலங்கை...........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செய லாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 31 பேர் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம் தொடர்பான புதிய சட்டதிருத்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உயர்கல்வித் துறை இராணுவ மயமாக் கப்படுவதைக் கண்டித்தும் நாடாளு மன்ற வளாகத்தில் இன்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் முன் னிலை சோசலிச கட்சி ஆகியன ஒன்றி ணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் கலந்துகொண்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இரண்டு பௌத்த தேரர்களும் இரண்டு பெண் களும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களைத் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாக வும் அவர் கூறியுள்ளார்.

கொரோனாப் பரவலை அடுத்து பொது மக்கள் ஒன்றுகூடல்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்கு நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பொதுமக்களின் உரிமையை அரசு அடக்க முற்படுகின்றது என எதிர்க் கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## பொலிஸ்அராஜ..........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் சட்ட நிபுணர் களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரைத் தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பயன்படுத்திப் பொலிஸார் கைதுசெய்கின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டி யுள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தடை செய்வதற்கும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடு வோரைக் கைதுசெய்வதற்கும் முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோ சனைக்கு அமைய கட்சியின் சட்ட நிபுணர்கள் அடுத்த வாரம் உயர்நீதி மன்றத்தில் இதற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக் கல் செய்யவுள்ளது எனத் தெரியவரு கின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இறுகும் பொருளாதார நெருக்கடி

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் முன்னைய அமர்வில் பெரும் நெருக்கடியையும் அழுத்தத்தையும் தருகின்ற தீர்மானம் ஒன்றை எதிர்கொண்ட இலங்கைக்கு அதையொட்டிய அடுத்த முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல் தான் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை ரத்துப் பற்றிய வெளிப்படுத்தலாகும்.

2010 இல் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி இதே மோசமான போக்கைக் கைக்கொண்ட போதும் இப்படி ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை விலக்கிக் கொள்ளப் போவதாக முன்னெச்சரிக்கை வழங்கி அதனை விலக்கிக் கொண்டது ஐரோப்பிய ஒன்றியம்.

அதனால் பல ஆடைத் தொழிற்சாலைகள் உட்பட தொழில் நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டன. நாட்டின் பொருளாதாரம் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டது. எனினும் அன்றைய நிலையில் நாடு ஏதோ சமாளித்துப் பிழைத்துக் கொண்டது.

பின்னர் வந்த நல்லாட்சி அரசு மேற்குலகின் கையில் காலில் விழுந்து, ஏதேதோ வாக்குறுதிகள் எல்லாவற்றையும் வழங்கி, இந்தச் சலுகையைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

ஆனால், சர்வதேச நியமங்களுக்கு அமைவான மனித உரிமைகள் நிலைமைகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் எண்ணத்திலும் நோக்கத்திலும் இல்லாத கோட்டாபய ஆட்சிப் பீடம் அதனால் அந்தச் சலுகைகளை நாடு இழந்து, பெரும் பொருளாதார நெருக்குவாரத்தில் மூழ்குவதற்கான நிலைமையை உருவாக்கி வருகின்றது.

அப்படி ஒரு சூழல் ஏற்பட்டால் அதனால் ஒன்றும் கெட்டுப் போகப் போவதில்லை, முன்னர் அந்தச் சலுகை ரத்துச் செய்யப்பட்ட போது அந்தச் சூழ்நிலையை வெற்றிகரமாக எதிர்கொண்டமை போல இப்போதும் எதிர்கொள்ள முடியும் என்ற சாரப்பட கயிறு விட்டிருக்கின்றார் பொருளாதார மறுசீரமைப்புக்கான இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால்.

முன்னர், ஜி.எல்.பி. வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் விலக்கிய போது நாட்டின் ஏற்றுமதி வீழ்ச்சி கண்டு, படுத்து விடும் என எல்லோரும் எதிர்பார்த்தார்கள், ஆனால், அதற்கு மாறாக, 2.9 பில்லியன் டொலர்களாக இருந்த வருடாந்த ஏற்றுமதி அடுத்த ஆண்டில் 3.6 பில்லியன் டொலர்கள் ஆக இருபது வீதத்தால் உயர்ந்தது என்றும் கணக்குக் காட்டியிருக்கின்றார் அமைச்சர் நிவாட் கப்ரால்.

ஆனால் அன்றைய களச் சூழ்நிலைமை வேறு. இன்றைய யதார்த்த நிலைமை வேறு. கொரோனாத் தொற்றுப் பரவலால் உலகப்பொருளாதாரமே சுருண்டு கிடக்கும் இன்றைய நிலையில், ஜி.எஸ்.பி. வரிச் சலுகை விலக்கலால் வீழக் கூடிய பொருளாதாரத்தை மீளத் தூக்கி நிறுத்தும் வாய்ப்புகள் அறவே இல்லை என்ற யதார்த்தத்தைப் புறம் தள்ளி, சாத்தியமற்ற நம்பிக்கைகளை வழங்க முற்படுகின்றார் அமைச்சர் கப்ரால்.

ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிடும் மனித உரிமைகள் விவகாரத்தில், அந்த விடயத்தை ஐரோப்பிய ஒன்றியத்துடன் சேர்ந்து முழு அளவில் வற்புறுத்தி, வலியுறுத்தி நிற்கும் மற்றைய முக்கிய தரப்பு அமெரிக்கா. இந்த விடயத்தில் அதுதான் முன்னணியிலும் நிற்கின்றது.

மனித உரிமைகள் நிலைவரத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாகப் பேணத் தவறியமைக்காக ஒரு தண்டனை நடவடிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் முன்னெடுத்தால், அமெரிக்கா அந்த விடயத்தில் தான் ஒரு பார்வையாளராக மட்டும் இருக்காது. தானும் தன் பங்குக்கு உரிய பங்களிப்பைக் காட்ட முயலும் என்று இலங்கை ஆட்சிப் பீடத்துக்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளன என்றும் செய்திகள் கசிந்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம் போன்று இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தையில் ஒன்று அமெரிக்கா. ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை விலக்க முற்படும்போது, தன் பங்குக்கு அதனுடன் சேர்ந்து அமெரிக்காவும் தன் தண்டனை நடவடிக்கையையும் மேற்கொள்ளுமாயின் இலங்கையின் நிலை அதோ கதியாகி விடும்.

பல நாடுகளின் பொருள்களைத் தன் நாட்டில் இறக்குமதி செய்வதற்கு வித்தியாசமான வீதத்தில் வரிகளை விதித்து, அவற்றுக்கு அமெரிக்க இராஜதந்திர நெருக்கடி கொடுத்து வருவது தெரிந்த விடயம்தான்.

ஐரோப்பிய ஒன்றியத்தைத் தொடர்ந்து அமெரிக்காவும் இலங்கையிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்கு ஆப்பு வைக்குமாயின் இலங்கையின் நிலைமை மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதைதான்.

ஆட்சி அதிகாரத்தை இராணுவ மயப்படுத்தி, சர்வாதிகாரப் போக்கில் ஒரு குழுவின் கைகளில் சிக்க வைத்திருக்கும் கோட்டா தரப்பு இந்த நெருக்கடிகளின் விளைவு பற்றி சிந்திக்காமல் ஏமாளித்தனமாக நடப்பது ஆச்சரியத்துக்குரியது.

# சுகாதாரத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி

### வழங்கப்பட வேண்டும் என்கிறார் மன்னார் நகர சபை உறுப்பினர்

தற்போது மன்னார் மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், சுகாதாரத் தொழிலாளர்கள் மற்றும் அலுவலக சுத்திகரிப்பாளர்களுக்கு தடுப்பூசி வழங்க இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே அவர்களுக்கு வயது வேறுபாடு இன்றி தடுப்பூசி வழங்க சுகாதாரத் துறை அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் நகர சபை உறுப்பினர் ச.மைக்கல் கொலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் மன்னார் மாவட்டத்திலும் தடுப்பூசி போடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

தடுப்பூசி முதலில் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போடப்பட்டது. அடுத்து மக்களுடன் தொடர்புடைய அரச உயர் அதிகாரிகள், வைத்தியர்கள், முப்படையினர் என கட்டம் கட்டமாக போடப்பட்டு தற்போது 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் போடப்பட்டு வருகின்றது.

அடுத்த கட்டமாக அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும், அனைத்துக் கிராமங்களிலும், அனைத்து வீடுகள், வைத்தியசாலைகள், அரச திணைக்களங்கள், பொது மக்கள் பயன்படுத்தும் பொது இடங்கள் அனைத்துக்கும் சென்று கழிவுகளை அகற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் மீது கவனம் செலுத்தாமல் இருப்பது மிகவும் கவலையை ஏற்படுத்துகின்றது.

தடுப்பூசி வழங்கப்பட வேண்டியவர்களில் சுகாதாரத் தொழிலாளர்கள் மற்றும் அலுவலக சுத்திகரிப்பாளர்கள் போன்றவர்களும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவர்கள்.

எனவே, எதிர்வரும் காலங்களில் அவர்களை முன்னுரிமைப்படுத்தி தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவாக கேட்டுக் கொள்கின்றோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு 12 ஆம் திகதி முதல் கொவிட் தடுப்பூசி



அனைத்து பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளோம் என கல்வியமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 10 ஆயிரத்து 155 பாடசாலைகளைச் சேர்ந்த அனைத்து கல்விசார், கல்விசாரா ஊழியர்களுக்கு இவ்வாறு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படும் என கல்வியமைச்சர் தெரிவித்தார்.

# ஆயிரத்து 25 பேருக்கு வவுனியாவில் தடுப்பூசி

வவுனியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு நேற்று (புதன்கிழமை) முதற்கட்டமாக இடம்பெற்றது.

வைத்திய உயர் அதிகாரிகள் சிலரின் முயற்சியால் வவுனியா மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்காக 1,000 தடுப்பூசிகள் வன்னிப் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கேமந்த பண்டாரவின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த தடுப்பூசிகள் நேற்று வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் வைத்து நான்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தடுப்பூசி பெறுவதற்காக வருகை தந்தவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –


வயதான எமக்கு தடுப்பூசியைப் பெற மிகவும் சிறப்பான ஏற்பாடுகளை சுகாதாரத் தரப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

எவருக்கும் முன்னுரிமை வழங்காமல் அனைத்து வயதானவர்களையும் ஒரே மாதிரியாகக் கவனித்து தடுப்பூசிகளை வழங்கியிருந்தமையை இட்டு மெய்சிலிர்க்கின்றோம்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு வைத்தியர்களுக்கும் இராணுவத்தினருக்கும் பொதுமக்கள் சார்பாக நாம் நன்றியை தெரிவிக்கின்றோம்.– என்றனர்.

இந்நிலையில் 1,000 பேருக்கான தடுப்பூசிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் சுமார் 25 பேர் அதிகமாக வருகை தந்தமையால் அவர்களைத் திருப்பி அனுப்பாமல் வவுனியா வைத்தியசாலையில் இருந்து 25 பேருக்குமான தடுப்பூசிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 3 கைக்குண்டுகள் மண்டைதீவில் மீட்பு





ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மண்டைதீவு பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து மூன்று கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மண்டைதீவு பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு பின்பக்கமாக உள்ள காணியில் நேற்று (புதன்கிழமை) காலை, விறகு எடுப்பதற்காகச் சென்ற கிராமவாசிகள் இந்தக் கைக்குண்டுகளைக் கண்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார், குண்டுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

# ஹைற்றி நாட்டின் அதிபர் சுட்டுக்கொலை



ஹைற்றி நாட்டின் அதிபர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தென்அமெரிக்கா– வட அமெரிக்கா கண்டத்துக்கு மத்தியில் ஹைற்றி என்ற தீவு நாடு அமைந்துள்ளது. இதன் அதிபராக ஜோவெனல் மாய்சே இருந்து வந்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் அவருடைய பதவி காலம் முடிந்து விட்டது. ஆனால் ஒரு ஆண்டு காலம் பதவியில் நீடிக்கப் போகிறேன் எனஅறிவித்து இருந்தார். இதனால் எதிர்க் கட்சிகள் அவருக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வந்தன.

இந்த நிலையில் அவரது வீட்டுக்குள் புகுந்த ஆயுதக் கும்பல் ஒன்று திடீரென துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தியது. அப்போது உள்ளே இருந்த அதிபர் ஜோவெனல் மாய்சேவை துப்பாக்கியால் சுட்டு கொன்றனர். அவரது மனைவி மார்ட்டின் மாய்சேவையும் சுட்டனர். அவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அதிபர் கொலை செய்யப் பட்டதால் ஹைற்றி நாட்டில் பதற்றம் ஏற்பட்டது. இதற்கிடையே துப்பாக்கிச் சண்டை நடத்தியவர்களை பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்தனர். அவர்களில் 4 பேரை சுட்டுக் கொன்றனர். 2 பேரை கைது செய்தனர். இதற்குபின்னணியில் அரசியல் தலைவர்கள் சிலர் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எனவே அவர்களையும் கைது செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளனர்.

இது சம்பந்தமாக இடைக்கால பிரதமர் கிளாட் ஜோசப் கூறும்போது, அதிபர் கொலை செய்யப்பட்டாலும் நாட்டின் பாதுகாப்பு நிலைமை கட்டுக்குள் இருக்கிறது. இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறினார். அதிபர் கொல்லப்பட்டமையால் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சம் நிலவுகிறது. இதன் காரணமாக மக்கள் வெளியில் வராமல் வீட்டுக்குள்ளேயே முடங்கி கிடக்கிறார்கள்.




## அமெரிக்கா மியாமியில்

# அடுக்குமாடி கட்டடம் விழுந்து 54 பேர் சாவு

அமெரிக்காவின் மியாமி நகரில் அடுக்குமாடி கட்டடம் சரிந்துவிழுந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 54 ஆக அதிகரித்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கிய 18 பேரின் சடலங்கள் நேற்று அகற்றப்பட்ட நிலையில், அங்கு 15 ஆவது நாளாக மீட்புப்பணி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இந்நிலையில் விபத்து நடந்த இடத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் மீட்புப்படையினர் கண்ணீருடன் அஞ்சலி செலுத்தினர்.

கட்டடம் இடிந்த போது காணாமல் போன நூற்றுக்கும் மேற்பட்டோரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில், அவர்கள் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என மீட்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.



## 100 நாள்களின் பின்னர்

# ‘எவர்கிவன்’ கப்பலை விடுவித்தது சூயஸ் கால்வாய் ஆணையம்

சர்வதேச அளவில் உலகின் மிக முக்கிய கப்பல் போக்குவரத்து வழித்தடமாக விளங்குகிறது சூயஸ் கால்வாய். இந்த கால்வாயில் கடந்த மார்ச் மாதம் ‘எவர்கிவன்’ என்ற மிகப்பெரிய சரக்குக் கப்பல் குறுக்கு பக்கமாக தரை தட்டி நின்றது.

இதன் காரண மாக சர்வதேச சரக்குக் கப்பல் போக்குவரத்து தடைப்பட்டு, உலக வர்த்தகத்தில் பாதிப்பு ஏற்பட்டது. கிட்டத்தட்ட ஒரு வார கால முயற்சிக்கு பிறகு ‘எவர்கிவன்’ கப்பல் மீண்டும் மிதக்கும் நிலைக்கு கொண்டு வரப்பட்டது.


இருப்பினும் கப்பல் தரை தட்டி நின்ற காரணத்தினால் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டை வழங்கும் வரை கப்பலை விடமாட்டோம் என ‘எவர்கிவன்’ கப்பலின் உரிமையாளரான ஜப்பானைச் சேர்ந்த ஷோய் கிசென் கைாவிடம் சூயஸ் கால்வாய் ஆணையம் தெரிவித்தது. அதற்காக ‘எவர்கிவன்’ கப்பலை சூயஸ் கால்வாய் அருகே உள்ள ஒரு ஏரியில் பிணையாக பிடித்து வைக்கப்பட்டது.

சுமார் 91.6 கோடி அமெரிக்க டொலர்களை ( இந்திய மதிப்பில் சுமார் ரூ.6 ஆயிரத்து 836 கோடி) இழப்பீடாக சூயஸ் கால்வாய் ஆணையம் கேட்டது. எனினும் பல்வேறு கட்ட பேச்சுக்குப் பிறகு இழப்பீட்டுத் தொகையை 55கோடி அமெரிக்க டொலர் (ரூ.4 ஆயிரத்து 108 கோடி) வரை சூயஸ் கால்வாய் ஆணையம் குறைத்துகொண்டது.

இந்த நிலையில் சூயஸ் கால்வாய் ஆணையம் கேட்ட இழப்பீட்டுத் தொகையை வழங்க ‘எவர்கிவன்’ கப்பலின் உரிமையாளர் ஷோய் கிசென் கைா ஒப்புகொண்டார். இது தொடர்பான ஒப்பந்தத்திலும் அவர் கையெழுத்திட்டார்.

இதனைத் தொடர்ந்து, 3 மாதங்களுக்குப் பிறகு ‘எவர்கிவன்’ கப்பலை சூயஸ் கால்வாய் ஆணையம் நேற்று விடுவித்தது. இதையடுத்து அந்த கப்பல் நெதர்லாந்து நோக்கிய தனது பயணத்தை மீண்டும் தொடங்கியுள்ளது.

# போட்ஸ்வானாவில் மீண்டும் ஒரு பெரிய வைரக்கல் கண்டுபிடிப்பு



ஆபிரிக்க நாடான போட்ஸ்வானாவில் மீண்டும் ஒரு மிகப் பெரிய வைரக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜ்வெனெங் சுரங்கத்தில் சுமார் ஆயிரத்து 98 கரட் எடை கொண்ட வைரம் கடந்த மாதம் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், தற்போது கபோரோன் (Gaborone) நகரில் உள்ளங்கை அளவுடைய வைரக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 174 கரட் எடைக் கொண்ட இந்த வைரக்கல், மிகப் பெரிதாகவும், வெள்ளை நிறத்திலும் இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் 1905 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட 3,106 கரட் எடை கொண்ட வைரக்கல்லே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதிலேயே மிகப்பெரிய வைரக்கல்லாக உள்ளது.



# டுபாய் துறைமுகத்தில் தீப்பிடித்தது கப்பல்

ஐக்கிய அரபு நாடான டுபாயில் மிகப் பெரிய வர்த்தக துறைமுகம் செயல்பட்டு வருகிறது.

அங்கு சரக்கு பெட்டகங்களுடன் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டு இருந்த கப்பல் தீப்பிடித்து கொண்டது.

கப்பலின் ஒரு பகுதி வெடித்துச் சிதறியது. மற்ற பகுதிகள் முழுவதும் தொடர்ந்து தீப்பிடித்து எரிந்தன. தீயணைப்பு படையினர் அதை கட்டுப்படுத்துவதற்கு போராடி வருகிறார்கள். என்ன காரணத்தால் வெடி விபத்து ஏற்பட்டது என்பது தெரியவில்லை.

கன்டெய்னரில் இருந்த வெடிக்கும் சக்தி கொண்ட பொருள்களால் விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஒருவேளை நாசவேலை காரணமாகவும் சம்பவம் நடந்து இருக்க வாய்ப்பு இருப்பதாகவும் சந்தேகிக்கிறார்கள்.

# கனடாவில் வெப்பம் சாம்பலான கிராமம்

கனடாவில் கொளுந்து விட்டு எரியும் காட்டுத்தீயில் சிக்கி ஒரு சிறிய ஊரே சாம்பலாகி உள்ளது. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் 80 ஆண்டுகளாக இல்லாத அளவிற்கு வெயில் வாட்டுவதாலும், வனப்பகுதியை ஏராளமான மின்னல்கள் தாக்குவதாலும் அடிக்கடி காட்டுத்தீகள் ஏற்பட்டு வருகின்றன.

வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ள லைட்டன் (Lytton) என்ற சிறிய ஊரே தீக்கு இறையானது.



# தமிழக பா.ஜ.க.தலைவர் முருகன் மத்திய அமைச்சராகப் பதவியேற்றார்



பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவராக இருந்த தமிழிசை சௌந்தர்ராஜன், 2019 ஆம் ஆண்டில் தெலங்கானா மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, ஓரிரு மாதங்கள் கழித்து அவரது இடத்துக்கு தமிழக பா.ஜ.கவின் தலைவராக எல்.முருகன் நியமிக்கப்பட்டார்.

பா.ஜ.க. தலைவராக எல்.முருகன் நியமிக்கப்பட்டதிலிருந்து தமிழகத்தில் பா.ஜ.கவுக்கான ஆதரவை அதிகரிக்க அவர் பல முயற்சிகளை முன்னெடுத்தார். அ.தி.மு.க. கூட்டணியில் இருந்தபோதும் அந்த அரசின் ஆட்சிக்கு எதிராகவே வேல் யாத்திரையை அறிவித்தார். தமிழகத்தில் நடைபெற்றுமுடிந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து பா.ஜ.க. தேர்தலை எதிர்கொண்டது. 20 தொகுதிகளில் போட்டியிட்ட பா.ஜ.க, 4 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றது.

இந்த நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. கூட்டணியின் அமைச்சரவை இரண்டாவது முறையாக கடந்த 2019 இல் பதவி ஏற்றதன் பின்னர் 2 ஆண்டுகள் கழித்து, நேற்று மாற்றங்களை எதிர்கொண்டது. மந்திரிசபை விரிவாக்கம் செய்யப்படுவதற்கு ஏதுவாக 12 அமைச்சர்கள் தங்களது பதவிகளை ராஜினாமாச் செய்தனர். 43 புதிய மத்திய அமைச்சர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் தமிழக பா.ஜ.க. தலைவரான எல்.முருகனின் பெயரும் இடம்பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து நேற்று மாலை இடம்பெற்ற புதிய மத்திய அமைச்சர்களின் பதவியேற்பு விழாவில் மத்திய அமைச்சராக தமிழக பா.ஜ.க. தலைவர் எல்.முருகன் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

## தமிழகத்திற்கு ஒரு மத்திய அமைச்சர் கிடைத்திருக்கிறார் என்று மகிழமுடியவில்லை

### கமல்ஹாசன் கருத்து



புதிதாகப் பதவியேற்றுள்ள மத்திய அமைச்சர்களில் தமிழகத்தைச்சேர்ந்தபா.ஜ.க.தலைவர் எல்.முருகனும் ஒருவர். இந்த நிலையில், மக்கள் நீதி மய்யம் கட்சித்தலைவர் கமல்ஹாசன் தனது டுவிட்டர் பக்கத்தில், தமிழகத்திற்கு ஒரு மத்திய அமைச்சர் கிடைத்திருக்கிறார் என்று மகிழ முடியாதபடி இருக்கிறது அமைச்சரவை விரிவாக்கம். நாடு அனைத்துத் துறைகளிலும் பின்னடைந்திருக்கிறது.

இந்தச் சரிவிலிருந்து மீளும் நோக்கத்தில் அமைச்சரவை மாற்றம் நடந்திருக்கவேண்டும்.

ஆனால், உள்கட்சித் தலைவர்கள், வேறு கட்சிகளிலிருந்து இணைந்தவர்கள், வரவிருக்கிற மாநில தேர்தல்கள் ஆகியவற்றை மனதில் வைத்து நடந்திருக்கும் இந்த விரிவாக்கம் பா.ஜ.கவிற்கு வேண்டுமானால் நன்மை பயக்கலாம். நாட்டிற்கு இதனால் ஆகப்போவதென்ன? என்று வினா எழுப்பியிருக்கிறார்.

## தேர்தலை நோக்காகக் கொண்டே மந்திரி சபையில் மாற்றம்

### காங்கிரஸ் பிரமுகர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சனம்



நடைபெறவுள்ள தேர்தல்களின் காரணமாகவே மத்திய அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ள தாக காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மல்லிகார்ஜுன் கார்கே விமர்சனம் செய்துள் ளார்.

இந்தப் புதிய மந்திரிசபையில், பட்டியல் வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு பெரும்பான்மையாக அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. தேர்தலை மனதில் கொண்டே இதனை மத்திய அரசு செய்துள்ளது. இது மக்களைத் திசைதிருப்பும் முயற்சி. இவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எந்தவகையிலும் நன்மையைச் செய்துவிடப் போவதில்லை என்று அவர் கூறியிருக்கிறார்.

## மத்திய அரசு முழுத் தோல்வி அடைந்திருக்கிறது அமைச்சர்கள் பதவி விலகக் காரணம் அதுவே!

### சிதம்பரம் விமர்சனம்



இந்தியாவில் நேற்று மத்திய அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 43 புதிய அமைச்சர்கள் பதவியேற்றுள்ள நிலையில், அமைச்சர்களாகவிருந்த 12 பேர் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர்.

இவர்களில் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால், மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சந்தோஷ் கங்குவார், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் ஆகியோரும் அடங்குகின்றனர்.

இந்த நிலையில் சுகாதாரத்துறை அமைச்சர் பதவி விலகியிருக்கின்றமை, கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு தோல்வி அடைந்திருப்பதையே காட்டுவதாக முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், ‘மத்திய அரசில் சுகாதார அமைச்சராகவும் இணை அமைச்சராகவும் இருந்தவர்கள் பதவி விலகியிருக்கிறார்கள் என்பது எதைக் காட்டுகிறது? கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு முழுத் தோல்வியை அடைந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது. ஒக்சிஜன் தட்டுப்பாடு இல்லை, தடுப்பூசித் தட்டுப்பாடு இல்லவே இல்லை என்று இவர்கள் நாள்தோறும் ஏன் பறைசாற்றினார்கள் என்ற கேள்வி எழுகிறதல்லவா? என்று கேள்விகளை எழுப்பியிருக்கிறார்.

## வைகோ மீதான வழக்கு ரத்து செய்தது சென்னை உயர்நீதிமன்றம்



ஆளுநர் மாளிகை குறித்து செய்தி வெளியிட்டதற்காக நக்கீரன் ஆசிரியர் கோபால் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து அனுமதியின்றிப் போராட்டம் நடத்தினார் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மீது பதிவு செய்யப்பட்டிருந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது.

மாணவிகளைப் பாலியல் தொல்லைக்கு உட்படுத்தினார் என பேராசிரியை நிர்மலா தேவி குறித்து நக்கீரன் இதழில் செய்தியொன்று வெளியாகியிருந்தது. அந்தச் செய்தியில் ஆளுநரின் பெயரை இணைத்து அவதூறு பரப்புவதாகவும், மேலும் ஆளுநர் பணியில் தலையிடுவதாகவும், ஆளுநரை பணி செய்ய விடாமல் தடுத்ததாகவும் ஆளுநரின் செயலாளர் காவல்துறையில் புகார் அளித்தார்.

இந்தப் புகாரின் அடிப்படையில், நக்கீரன் இதழின் ஆசிரியர் கோபால் உள்ளிட்ட சிலர் மீது வழக்குப் பதியப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி நக்கீரன் கோபால் கைது செய்யப்பட்டார். இதைக் கண்டித்து ஊடகத்தினரும் பல்வேறு அரசியல் கட்சியினரும் போராட்டக் களத்தில் இறங்கினர்.

நக்கீரன் கோபால் கைது செய்யப்பட்டபோது, அவரைச் சந்திக்க முயன்ற ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோரை காவல் துறையினர் தடுத்தனர். இதனால், தரையில் அமர்ந்து தர்ணாப் போராட்டத்தில் ஈடுபட்ட வைகோ உள்ளிட்ட 5 பேர் மீது, அனுமதியின்றிப் போராட்டம் நடத்தியது, போக்குவரத்தை முடக்கியது ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள எம்.பி., எம்.எம்.எல்க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கை ரத்துச் செய்யக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த ஏப்ரல் மாதம் வைகோ மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி நிர்மல் குமார் நேற்றுப் பிறப்பித்த தீர்ப்பில் வைகோ உள்ளிட்ட 5 பேர் மீதான வழக்குகள் அனைத்தையும் ரத்துச் செய்து உத்தரவிட்டுள்ளார்.

## ஒக்சிஜன் உற்பத்திக்கு மேலும் 6 மாத கால அவகாசம் உயர்நீதிமன்றில் வேதாந்தா நிறுவனம் மனு

தமிழகம் முழுவதும் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தீவிரமாகப் பரவிய நிலையில், ஒக்சிஜன் பற்றாக்குறை காரணமாக பலர் உயிரிழக்கும் சூழல் ஏற்பட்டது. இதனால், ஒக்சிஜன் பற்றாக் குறையைப் போக்குவதற்கு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்தச் சூழலில் தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் ஒக்சிஜன் தயாரித்து வழங்க அனுமதி கோரியிருந்தது. இதற்கு உயர்நீதிமன்றம் அனுமதியளித்து உத்தரவிட்டதன்பேரில், தமிழக அரசும் அனுமதி வழங்கியது. இதையடுத்து கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, ஸ்டெர்லைட் ஆலையில் ஒக்சிஜன் உற்பத்தியைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

இதனைத்தொடர்ந்து ஸ்டெர்லைட் ஆலையில் ஒக்சிஜன் உற்பத்தி செய்யப்பட்டு தென்மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுவருகிறது. ஸ்டெர்லைட் ஆலையில் மூன்று மாத காலத்திற்கு மட்டுமே ஒக்சிஜன் உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், நடப்பு மாதத்துடன் அதற்கான அனுமதி முடிவடையவுள்ளது. அதனால், ஒக்சிஜன் உற்பத்திக்கு மேலும் 6 மாத கால அவகாசம் கேட்டு வேதாந்தா நிறுவனம் உயர் நீதிமன்றம் நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளது.



## மருத்துவ அதிகாரிக்கு எதிராக

# அக்கரைப்பற்று வைத்தியசாலை வைத்தியர்கள் வேலை நிறுத்தம்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று காலை 8 மணி முதல் பகல் 12 மணிவரை அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற் கொண்டனர்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம். ஜவாஹிரின் நிர்வாக முறைகேடுகள், நிர்வாக அடக்குமுறைகள், கொவிட் தொடர்பான நோயாளிகளின் தவறான நிர்வாக நடைமுறைகள் மூலம் நோயாளிகள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கிய செயற்பாடுகளை கண்டித்து பதில் வைத்திய அத்தியட்சகரை நீக்கி அவருக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தை கேட்டுக்கொண்டிருந்தும், போதுமான கால அவகாசம் வழங்கப்பட்ட நிலையில் முன்னேற்றகரமான செயற்பாடுகள் எதுவும் இடம்பெறாத நிலையில் இன்று தாங்கள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதற்கு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தள்ளப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம் என குறிப்பிட்டுள்ளனர் .இதில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் என்பன முற்றாக தடைப்படுவதுடன் அவசரசிகிச்சை, டயலைசிஸ், மகப்பேறு மற்றும் சிறுவர் சிகிச்சைப்பிரிவுகள் என்பன வழமைபோல் இயங்குகின்றன. எங்களின் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். குறித்த போராட்டத்தால் வைத்தியசாலை ஸ்தம்பித்த நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுதல் வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வேண்டுகோள்



அரசாங்கத்தில் உள்ள இளம் தலைவர்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இளைஞர் யுவதிகளுக்கு அதிக சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும். இலங்கையில் இன்று பென்சன் வாங்கிய பின்னர் நாட்டுக்குச் சேவையாற்றும் முறையொன்று உருவாகியுள்ளது.

60 வருடங்கள் தமது குடும்பத்துக்காக உழைத்து அர சாங்கத்தின் வரப்பிரசாதங்களை பெற்றுவிட்டு, பென்சன் வாங்கிய பின்னர் தான் நாட்டுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற உணர்வுடன் சிலர் உள்ளனர்.

எனவே இளைஞர் யுவதிகளுக்கு இளமை காலங்களில் சந்தர்ப்பங்களை பெற்று கொடுங் கள். வேட்பு மனுத்தாக்கலில் மாத்திரம் 100இற்கு 25 வீதம் இளைஞர யுவதிகளுக்கு வழங்குவதால் மாத்திரம் இளைஞர், யுவதிகளில் பிரதிநித்துவத்தை அதிகரிக்க முடியாது.

தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்படவேண்டும். அதில் முறையொன்று இருக்கும் வரை அது சிரமமான விடயம். மாவட்டத்தில் போட்டியிடும் அமைச்சர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அரசியல்வாதிகள், பணம்படைத்தோரிடம் போட்டியிட்டு சாதாரணமானவர்கள் வெற்றிபெற முடியாது.

தேர்தல் பிரசாரம் முக்கியமானது. பெண்களுக்கும் விசேட இடங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும். சில பிரதேசங்க ளில் பெண் பிரதிநிதிகளுக்கு பதிலாக அவர்களது கணவன் தான் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே வெற்றியளிக்கும் முறையொன்றை நாங்கள் உருவாக்க வேண்டும்.

உலக நாடுகளை எடுத்துக்கொண்டால் பின்லாந்தில் இளம் வயதுடைய பெண் பிரதமர் உள்ளார். இத்தாலி போன்ற நாடுகளில் 33 வயதில் நிதியமைச்சர் உள்ளார். நியுசிலாந்து பிரதமருக்கு 39 வயது. இலங்கையில் அவ்வாறான இளம் பிரதமர் ஒருவர் வர வேண்டும் என்று நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

அரசாங்கத்தில் உள்ள இளம் தலைவர்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். துமிந்த திசாநாயக்க போன்றவர்கள் இலங்கையில் இளம் அமைச்சர்களாக உள்ளனர். அவ்வாறான இளம் தலைவர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்க வேண்டும்.

கட்சி பேதங்களுக்கு அப்பால் இளைஞர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே இதனை சொல்கின்றேன். நாமல் ராஜபக்ஷவை பிரதமராக்கப் போகின்றோம்என சமூகஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

கட்சி பேதமின்றி இவ்வாறு இளைஞர் ஒருவர் பிரதமரானால் எங்களுக்கும் விருப்பம்தான். எனினும் நாமல் ராஜபக்ஷ மூன்றாவது சக்கரமாக பஷில் உள்ளார் என கூறினார்.

எனினும், அந்த இடத்துக்கு அவர் வந்திருக்கமுடியும். இலங்கைக்கு இளம் பிரதமர் ஒருவர் வந்தால் நல்லது. நியுசிலாந்தில் பெண் பிரதமர் இரண்டு வருடங்களில் செய்த சேவையை இரண்டு நிமிடங்களில் கூறினார். எமது நாட்டில் ஒரு வருடத்தில் செய்த சேவைகளை கூற 69 நிமிடங்கள் எடுத்தன. எனவே இளைஞர் யுவதிகளுக்கு இடமளிக்க வேண்டும். எனக் குறிப்பிட்டுள்ளார்.



# ஓட்டமாவடியில் சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு பல்வேறு உதவித் திட்டங்கள்

சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சமூர்த்தி சீட்டிழுப்பு நிதியத்தின் மூலம் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சமூர்த்தி வீடமைப்பு சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற மாஞ்சோலை கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த ஆ.பா.றகுமத்தும்மா என்பவருக்கு வாழ்வாதார திட்டத்திற்காக அவருடைய மகனுக்கு வியாபாரம் செய்யும் நோக்கில் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்து வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செயலக சமூர்த்தி தலைமைபீட முகாமையாளர் எம்.ஐ.அஸீஸ், சமூர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# பஸிலுக்கு வாழ்த்து தெரிவித்து மட்டக்களப்பில் குதூகலம்

பஸில் ராஜபக்ஷ இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் முன்னிலையில் நிதி அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டமையுடன் நாடாளுமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதனையடுத்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் தலைமையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு நகர் பகுதியிலும், பட்டிருப்பு தொகுதியிலும், செங்கலடியிலும் இன்று காலை 10 மணிக்கு பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டு, பட்டாசுகொழுத்தி பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்களால் மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.






# காத்தான்குடி பிரதேசத்தில் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிப்பு

நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்று அச்சநிலையை கருத்திற்கொண்டு மாத்தளை மாவட்டத்தில் சில பகுதிகள் இன்று காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஹரஸ்கம கிராமம் மற்றும் அகலவத்த கிராமம் ஆகிய பிரதேசங்கள் இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

மேலும், மட்டக்களப்பு மற்றும் மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த 7 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இத்தருணம் முதல் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர்



## டென்மார்க்கை வீழ்த்திய இங்கிலாந்து இறுதிப்போட்டியில்!

வெம்ப்ளியில் இலங்கை நேரப்படி இன்று அதிகாலை நடந்த யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாம் அரையிறுதியில் இங்கிலாந்து வீரர் ஹரிகேனின் கோல் மூலம் டென்மார்க்கை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது இங்கிலாந்து.

2-1 என்ற கோல் கணக்கில் பதற்றமான போட்டியில் வென்ற இங்கிலாந்து 1966 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்குப் பிறகு முதல் முறையாக பெரிய தொடர் ஒன்றின் இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. யூரோ கால்பந்து தொடரில் முதல் முறையாக இங்கிலாந்து அணி இறுதிப்போட்டியில் விளையாடவுள்ளது.

ஆட்டத்தின் 30 ஆவது நிமிடத்தில் டென்மார்க்கின் மிக்கெல் டொம்ஸ்கார்ட், 25 அடியிலிருந்து கோலடிக்க, டென்மார்க் 1-0 என்று முன்னிலை பெற்றது. ஆனால் 39 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து கொடுத்த நெருக்கடியில் டென் மார்க் வீரர் சிமன் கியா சேம்சைட் கோல் அடிக்க இங்கிலாந்து போட்டியைச் சம ன் செய்தது.

90 நிமிடங்களின் முடிவில் போட்டி 1-1 என்று சமநிலையிலேயே இருக்க, 30 நிமிடங்கள் மேலதிய நேரம் வழங்கப்பட்டது. 104 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அடித்த பெனால்டி கிக்கை டென்மார்க் கோல் காப்பாளர் தடுக்க, திரும்பி வந்த பந்தை ஹரி கேன் கோலாக மாற்றி 2-1 இங்கிலாந்துக்கு வெற்றி வாய்ப்பை ஏற்படுத்தினார். ஆட்ட முடிவில் இங்கிலாந்து வென்று 55 ஆண்டுகளுக்குப் பிறகு பெரிய கால்பந்தாட்டத் தொடரின் இறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது.வரும் ஞாயிறன்று இறுதிப் போட்டியில் இங்கிலாந்து - இத்தாலி அணிகள் மோதவுள்ளன.

### ரோஜர் பெடரர் எதிர்பாராத தோல்வி

## அரையிறுதியில் போலந்து வீரர் ஹூபர்ட் ஹர்காச்



விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தில் போலந்து வீரர் ஹூபர்ட் ஹர்காச்சிடம் சுவிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரர் 6-3, 7-6, 6-0 என்று நேர் செட்களில் தோல்விய டைந்து வெளியேறியிருக்கிறார். இதன் மூலம் தரவரிசையில் 14 ஆம் இடத்திலுள்ள ஹூபர்ட் ஹர்காச் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

2020 இல் இருமுறை வலது முழங்கால் காயத்திற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்ட பெடரர், இதனால் மொத்தமாக ஒருவருடம் டென்னிஸ் விளையாடாமல் இருந்தார். இந்த சீசனில் மொத்தமே 8 போட்டிக ளில் ஆடிய நிலையில்தான் விம்பிள்டனுக்கு வந்தார். முதல் சுற்றுப்போட்டியிலேயேதோற்கும் நிலையிலிருந்து அதிர்ஷ்டத் தால்அடுத்தசுற்றுக்குள்வந்தார். அதனை அவரே வெளிப்படை யாக ஒத்துக்கொண்டிருந்தார்.

வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதி பெடரரின் வயது 40 ஆகிறது. எனவே, அவரது 30 களின் கடைசிப்போட்டியாக இது அமை ந்தது. எனவே, இந்த வயதில் அவரிடம் அதிகம் எதிர்பார்க்கக் கூடாது என்பதே ரசிகர்களின் நிலைப்பாடாகவும் இருக்கிறது. டென்னிஸ் உலகில் இவர், செய்யாதசாதனைகளே இல்லை என்பதோடு, இதுவரைடென்னிஸ் உருவாக்கிய ஒரேயொரு தனித் துவ வீரர் என்று துறை சார் வல்லுநர்களால் போற்றப்படும் வீரராக இருக்கின்றமையும் இவரது சிறப்பாகும்.

இவரை எதிர்த்து ஆடிய போலந்து வீரர் ஹூபர்ட் ஹர்காச் இதுவரை எந்த பெரிய தொடரிலும் மூன்றாவது சுற்றைத் தாண்டியதில்லை. முதல் செட்டில் பெடரரிடம் தோற்ற அவர், இரண்டாவது சுற்றை டைபிரேக்கரிலும், மூன்றாவதை பெடரர் மறக்க வேண்டிய சுற்றாக்கி 6-0 என்றும் வென்று அசத்தியிருந்தார். ஏனைய இரு காலிறுதி ஆட்டங்களில் நோவக் ஜோகோவிச் மற்றும் டெனிஸ் பவலோவ் ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.



### மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளுக்கான

## இலங்கை அணியின் தலைவர் தசுன் சானக

இலங்கைக் கிரிக்கெட் அணியின் ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளுக்கான தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்த இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை அணியின் தலைவராக சகல துறை வீரர் தசுன் சானகவை தலைமைப் பதவிக்கு நியமனம் செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2015 ஆம் ஆண்டு தேசிய அணியில் இடம்பிடித்து இதுவரை 28 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள தசுன் சானக, 26.56 என்ற சராசரியில் 611 ஓட்டங்களைப் பெற்றுள்ளதோடு 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருக்கிறார். 43 ரி-20 போட்டிகளில் 548 ஓட்டங்களை எடுத்து, 11 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருக்கிறார்.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களுக்கான இலங்கை அணியின் தலைவராக குசல் ஜனித் பெரேரா அண்மையிலேயே நியமிக்கப்பட்டிருந்தார். ஒருநாள் போட்டிகளுக்கானஅணித் தலைமை கடந்த மே மாதத்திலும் ரி-20 தலைமைப் பதவி இங்கிலாந்து அணிக்கெதிரான கடந்த தொடரின் போதும் இவருக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விம்பிள்டன் டென்னிஸ் மகளிர் அரையிறுதி
## அஷ்லெ - கெர்பர், பிளிஸ்கோவா- சபலென்கா

*விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறு திக்கு ஏஞ்சலிக் கெர்பர், அஷ்லெ பார்டி ஆகியோர் முன்னேறியுள்ளனர்.*

*2018 ஆம் ஆண்டு விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்ற ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர், செக் குடியரசின் கரோலினா முச்சோவாவை 6-2, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.*

*மற்றொரு போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் அஷ்லெ பார்டி, சக நாட்டு வீராங்கனை அஜ்லாவை 6-1, 6-3 என வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.*

*அரையிறுதிப் போட்டிகளில் அஷ்லெ பார்டி, ஏஞ்சலிக் கெர்பரையும் பிளிஸ்கோவா, சபலென்காவையும் எதிர்த்தாடுகின்றனர்.*



# கிளிநொச்சியில் ஆசிரியர்களுக்கும் கொவிட் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது

## அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்துக்குக் கிடைத்த 5 ஆயிரம் தடுப்பூசிகளில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றும் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கொவிட் தடுப்பூசி மற்றும் தொற்று நிலைவரம் தொடர்பான ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் குறித்த ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசிகளை ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் திங்கட்கிழமைமுதல் தடுப்பூசிஏற்றும்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றன.

திங்கட்கிழமை 60 வயதுக்கு மேற்பட்ட 188 பேர் தடுப்பூசியை பெற்றிருக்கின்றார்கள். செவ்வாய்க்கிழமை 766 பேர் தடுப்பூசியை பெற்றுக்கொண்ட நிலையில் தடுப்பூசி ஏற்றும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. மக்கள் அதிகம் ஆர்வம் காட்டுவது போன்று தென்படவில்லை. இந்த செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றபோது மக்கள் ஆர்வம் காட்டுவார்கள் என்று நம்புகின்றோம். கிளிநொச்சி நகர்ப்புறங்களில் உள்ள மக்கள் ஆர்வத்துடன் வந்து தடுப்பூசி களை பெற்றுக் கொள்கின்றமையைகாணக்கூடியதாக இருக்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு 5 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறைந்த அளவிலான தடுப்பூசிகளே ஏற்றி முடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றும்படியாகவும் அரசாங்கத்தால் கூறப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக அவர்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றும் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்கு சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கிட்டத்தட்ட 18 ஆயிரம் பேர் இருக்கின்றார்கள். வழங்கப்பட்ட ஊசிகள் காணாது என்பது வெளிப்படையாகும். முதல் கட்டமாக கிடைத்த தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதில் மக்கள் காட்டும் ஆர்வம் மற்றும் விழிப்புணர்வுகளை அடிப்படையாகக்கொண்டு முழுமையாக முடிப்பதற்கு ஏற்புடையதாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சௌபாக்கியவார வேலைத் திட்டம் நல்லூரில் நடந்தது





சௌபாக்கியா வார வேலைத்திட்டத்தின் ஓர் அம்சமாக, நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவித்தொகை கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும், மாணவர்களுக்கான 'சிப்தொர' புலமைப்பரிசில்களும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டன.

# மக்கள் காங்கிரஸின் அரசியல்பீடம் கூடியது!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அரசியல்பீடம், கடந்த செவ்வாய்க்கிழமை கட்சியின் பிரதித் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீட் தலைமையில் கொழும்பில் கூடி, கட்சித் தலைவர் ரிஷாத் பதியுதீனின் விடுதலை தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்தோம் என மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், அரசியல் பீட அங்கத்தவருமான ஏ.ஜெ.எம்.பாயிஸ் தெரிவித்தார்.

கட்சித்தலைவர் ரிஷாத் பதியுதீனின் அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணை, இன்று இடம்பெற்றமை



யால் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்து, அடுத்த கட்ட நகர்வுகளை கட்சி மேற்கொள்வது எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் சுபைர்தீன், பொருளாளர் ஹுசைன் பைலா, நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், கட்சியின் சட்டப் பணிப்பாளர் ருஷ்தி ஹபீப் மற்றும் ஏ.ஜெ.எம்.பாயிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாத் கடாக் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று நேற்று புதன்கிழமை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

# நூறு பாடசாலை மைதானங்கள் புனரமைப்பில் நீர்வேலி அத்தியாரும்



**சாவகச்சேரி நிருபர்**

விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் நாட்டில் 100 பாடசாலை விளையாட்டுமைதானங்களை புனரமைக்கும் திட்டத்தில் யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்பு பணிக்காக 32 லட்சம் ரூபா ஒதுக்கிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது மைதானததைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# முல்லை கேப்பாபிலவு மாதிரி கிராம மக்களுக்கு குடிதண்ணீர் பிரச்சினை

*முல்லைத்தீவு கேப்பாபிலவு மாதிரி கிராமத்தில் வசிக்கும்65வரையானகுடும்பங்கள் தற்போதைய வறட்சியானகாலநிலை காரணமாக குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்கின்றோம் என தெரிவித்துள்ளனர்.*

*முல்லைத்தீவுமாவட்டத்தின்கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட கேப்பாபிலவு மாதிரி கிராமத்தில் தற்போது 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.*

*இந்தநிலையில் குறித்த பிரதேசத்தில் 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன அதாவது குறித்த கிராமத்தில் பத்துக்கும் மேற்பட்ட பொதுக் கிணறுகள், குழாய்க்கிணறுகள் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டன. இதில் கூடுதலான கிணறுகள் நீரின்றி காணப்படுகின்றன அதேவேளை குழாய்க் கிணறுகளும் பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இதனால் தாங்கள் குடிதண்ணீர் மற்றும் ஏனைய தேவைக்கான தண்ணீரை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.*

*குறித்த குழாய்க் கிணறுகளை புனரமைத்து குடிதண்ணீர்க் கிணறுகளைத் துப்புரவு செய்து தருமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்த போதும்இதுவரைஎந்தவிதமானநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் குடிதண்ணீர் இன்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வரும் மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளரை பல தடவை தொடர்பு கொள்ள முற்பட்ட போதும் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

# ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரியின் மைதானமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் '200 பொது மைதானங்களை அபிவிருத்தி செய்தல்' எனும் தேசிய திட்டத்துக்கமைய, ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி மைதானம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கென 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், மைதான அபிவிருத்திக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகளின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டன. மைதானத்தை மட்டப்படுத்துவதற்கு தேவையான மண்ணை பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகளும் இதன்போது செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்தத் திட்டத்தின்கீழ், யாழ். மாவட்டத்தில் 10 மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.07.2021இல் வெளியிடப்பெற்றது.